உ

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
# Kokuvil Hindu College Old Students Association - Canada
## கல்விசார் போட்டி - Educational Contest - 2019

### பேச்சு - Speech

பிரிவு:- 18 வயதுக்குட்பட்டோர் Age Group :- Under 18

## விநாயகர் வழிபாடு

விநாயகர் வழிபாடு சைவமக்களிடையே முக்கியத்துவம் பெற்றுள்ளது. விநாயகர் என்பதன் பொருள் தமக்கு மேலாக வேறொரு தலைவர் இல்லாதவர் என்பதே ஆகும். அப்படியாயின் பரம்பொருளாம் சிவபெருமானுக்கும் விநாயகப்பெருமானுக்கும் பேதமில்லை என்பதை உணரமுடிகிறது. சிவனின் முத்த குமாரராக விநாயகர் குறிப்பிடப்படுகின்றார். இதனாலேயே இவர் பிள்ளையார் என்னும் திருநாமம் பெற்றார்.

பிள்ளையார் அருமையும் பெருமையும் வாய்ந்தவர். ”ஓம்” என்னும் ஒலியிலிருந்தே இந்த உலகமும் ஏனைய அண்டங்களும் தோன்றுவதற்கான தொடக்கம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. ஒலியே முதற்தோன்றிய காரணத்தால் எக்கருமங்களையும் தொடங்குவதற்கு முன்னர் ஒலிவடிவினரான விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவது சைவமரபின் பெருமையை எடுத்து உரைக்கின்றது.

ஓங்கார மூர்த்தியாகவும், பேரறிவே உருவாகவும் விளங்குகின்ற விநாயகப்பெருமானின் திருப்பாதங்களை மெய்யன்புடன் தினமும் வணங்கித் துதிப்போர்க்கு நல்வாக்கும், நல்மனமும், நன்நோக்கும் உண்டாகுமென ஔவைப்பாட்டியார் உறுதி கூறுகின்றார்.

கணங்களின் தலைவன் என்பதால் கணபதி எனப்பெயர் பெறுகின்ற விநாயகர் பிரமச்சாரியாகவே குறிக்கப்படுகின்றார். ஆயினும் சித்தி, புத்தி எனும் இரு தேவியர்கள் அவரிற்கு உண்டு என்றும் புராணங்கள் கூறுகின்றன. விநாயகரை வணங்கி அறிவு, விவேகம் எனும் புத்தியைப் பயன்படுத்தி எக்கருமங்களைச் செய்யினும் சித்தி எனும் வெற்றியை அடையமுடியும் என்பதே இதன் பொருளாம். விநாயகரை உள்ளன்போடு வழிபாடு செய்வோர்க்கு அவர்களின் அறியாமையை அகற்றி அவர்களிடம் அறிவொளியை ஏற்றுகின்றார். அவ்வகையில் சித்தியும், புத்தியும் விநாயகரின் தேவியர்களாக திருவருட் சத்திகள் ஆயினர்.

ஞானமுதல்வரான விநாயகரை முதலில் வழிபாடு செய்த பின்னரே தினமும் எக்கருமங்களையும் செய்கின்ற வழக்கம் எம்மிடையே இருந்து வருகின்றது. விநாயகரின் திருவுருவத்தை பசுவின் சாணத்தினாலோ அல்லது மஞ்சள் மாவினாலோ செய்து அதில் அறுகம்புல் செருகி மலர்தூவி வணங்குகின்றோம். இது அறிவு சொரூபமான விநாயகரின் எளிமையான தன்மையை குறிப்பிடுகின்றது. ஆதலால் அவர் இருக்கும் இடத்தில் எளிமையும், இனிமையும், அன்பும் இருக்க வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

விநாயகப்பெருமான் பேரன்பு நிறைந்தவர், பேராற்றல் உள்ளவர், எங்கும் எதிலும் நிறைந்திருப்பவர். வாழ்க்கை செம்மையாவதற்கு மனதில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும், செயலில் நல்லவை வேண்டும். விநாயகர் வழிபாடு இவ்வனைத்தையும் மக்களுக்கு வழங்குகின்றது. நாமும் விநாயகரை தினமும் வணங்கி வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று உய்வு பெறுவோமாக.